IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO. 141/2022

DEPOSITION OF WITNESS P.W. 1

| | | |
|---|---|---|
| NAME | : | PARI |
| FATHER'S NAME | : | JAYAPAL |
| VILLAGE | : | CHENNAI |
| OCCUPATION | : | PRIVATE JOB |
| AGE | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 6th day of September 2024.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சென்னையில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். நான் சேவூரில் அம்பாலால் டிசர்ஸ்ட் என்ற குடியிருப்புகள் நிறைந்த பகுதியில் தனி வீட்டில் வசித்து வருகிறேன். அந்த குடியிருப்புக்கு பராமரிப்புக்காக ஆஜர் எதிரிகள் மூவரும் எங்களிடம் வந்து சந்தா தொகையாக ரூ.4000/- கேட்டார்கள். நான் அதற்காக ரூ.2000/- அவர்களிடம் கொடுத்தேன். அதனை தொடர்ந்து மீண்டும் சந்தா தொகை கேட்டதால் நான் கட்ட மறுத்துவிட்டேன். இதன் காரணமாக கடந்த 11.07.2021ம் தேதி அன்று இரவு 09.00 மணிக்கு நான் வீட்டிலிருந்த போது துரைசாமி, தட்சணாமூர்த்தி மற்றும் ரமேஷ் ஆகிய மூவரும் எங்கள் வீட்டின் கேட் உள்ளே அத்து மீறி நுழைந்து சந்தா பணம் கேட்டு எதிரிகள் மூவரும் தெவிடியாபையா என்று அசிங்கமாக திட்டினார்கள். செங்கல்லால் எதிரி துரைசாமி என்னை தலையில் அடித்தார். என் மனைவி சுமங்கலி தடுக்க வந்தார். அப்போது எதிரிகள் ரமேஷ் மற்றும் தட்சிணாமூர்த்தி கட்டையால் எனது பின்பக்கத் தலையில் அடித்தார்கள். எனக்கு தலையில் ரத்தம் வழிந்தது. அக்கம் பக்கத்தினர் வந்துவிட்டார்கள். எனது நண்பர் கோபி என்பவரின் உதவியுடன் அவரது இரு சக்கர வாகனத்தில் பெண்ட்லேண்ட் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுவிட்டு மறுநாள் காலை காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் உடைந்த செங்கல் மற்றும் கட்டையால் தான் எதிரிகள் தாக்கினார்கள். அவை முறையே **சா.பொ.1** மற்றும் **சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார் மனுவை நான் எழுதவில்லை என்றாலும், கையொப்பம் மட்டுமே செய்துள்ளேன் என்றாலும் சரிதான். படித்துபார்த்துவிட்டு கையொப்பம் செய்தேன். புகார் மனுவை என் அப்பா எழுதிக் கொடுத்தார். நான் புகார் மனுவை எழுதவில்லை என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் கூறாமல் முதல் முறையாக நீதிமன்றத்தில் தற்போது தான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். புகார் மனுவில் எனது அப்பா எழுதிக் கொடுத்தார் என்பதை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் குடியிருக்கும் அம்பாலால் டிசர்ஸ்ட் என்ற பகுதி தனித்தனியான வில்லா வகையிலான குடியிருப்புகள் உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி குடியிருப்பில் எனது வீடு இடது பக்கம் கடைசி வீடு என்றால் சரிதான். எனது வீட்டின் எதிரே உள்ள மின்கம்பத்தில் கண்காணிப்பு கேமரா பொறுத்தப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது வீட்டிற்கு வரும் வழியிலுள்ள நான்கு மின்கம்பங்களிலும் கண்காணிப்பு கேமரா பொறுத்தப்பட்டுள்ளது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வீட்டு எண்.53 க்கு எதிரே உள்ள மின்கம்பத்தில் இரண்டு கண்காணிப்பு கேமராக்கள் பொறுத்தப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு ஞாபகமில்லை. அதில் ஒரு கேமரா எனது வீட்டை நோக்கியபடியும், மற்றொன்று எதிர் திசையிலும் உள்ளது என்றால் அது குறித்து ஞாபகம் இல்லை. தற்போது நான் சென்னையில் வசித்து வருகிறேன். சேவூர் அம்பாலால் குடியிருப்பில் செப்டம்பர் 2020 முதல் ஜூலை 2021 வரை குடியிருந்தேன்.

மேற்படி குடியிருப்புக்கு குடியிருப்பு உரிமையாளர்கள் சங்கம் என்று ஒன்று உள்ளதா என்றால் இல்லை. எந்த காரணத்திற்காக எதிரிகள் சந்தா தொகை கேட்டார்கள் என்றால் பராமரிப்பு பணிகளுக்காக சந்தா தொகை கேட்டார்கள். சம்பவத்திற்கு முன்பாக ரூ.2000/-யை G Pay மூலமாக எதிரி தட்சிணாமூர்த்திக்கு சந்தா தொகையாக கொடுத்தேன். நான் சொன்னது போல் எதிரிக்கு பணம் அளிக்கவில்லை என்றாலும் அவ்வாறு அளித்திருந்தால் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்த்திருப்பேன் என்றாலும் சரியல்ல. எதிரிகள் மாத மாதம் சந்தா தொகை கேட்டார்களா என்றால் ஆமாம். மேற்படி விவரங்களை போலீசார் விசாரணையில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன்.

சம்பவதினத்தன்று எனது வீட்டில் நானும், எனது மனைவியும், எனது குழந்தையும், எனது மனைவியின் அம்மாவும் இருந்தோம். எதிரி துரைசாமி என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 செங்கல்லால் என்னை அடித்தார் (சாட்சி தனது இடது நெற்றியில் உள்ள காயத்தழும்பை காட்டி செங்கல்லால் அடித்ததால் தான் மேற்படி காயம் ஏற்பட்டதாக கூறினார்) என்னை தாக்கியதாக சொல்லப்படும் கட்டையில் ரத்தக்கரை இருந்ததா என்றால் அதனை நான் கவனிக்கவில்லை. நடந்த சம்பவங்களை எனது மனைவி வீடியோ பதிவு செய்தார் என்றால் சரிதான். அந்த வீடியோ பதிவை போலீசார் விசாரணையின் போது நான் சமர்பிக்கவில்லை. போலீசார் என்னை இவ்வழக்கு தொடர்பாக விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

நான் சொல்வது போல் எதிரிகள் கட்டையால் அடித்திருந்தால் கட்டையில் ரத்த கரை படிந்திருக்கும் என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் எத்தனை கட்டையால் எதிரிகள் தாக்கினார்கள் என்று கூறியது தற்போது ஞாபகமில்லை. இதுபோன்ற பிரச்சனையின் போது அவசர எண்.100 க்கு போன் செய்தால் போலீசார் வருவார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். எனது சத்தம் கேட்டு தோராயமாக 10 நபர்கள் அங்கு வந்திருந்தார்கள். சம்பவ சமயத்தில் எனது நண்பனின் காரான Ford figo என்ற காரை நான் வைத்திருந்தேன். நான் எனது வீட்டில் பணிபுரியும் பெண்மணியின் மகனுக்கு போன் செய்து அவருடன் மருத்துவமனைக்கு சென்றேன்.

இந்த சம்பவம் குறித்து நான் எனது அப்பாவிற்கு தகவல் சொன்னேன். அப்போது எனது அப்பா சென்னையிலிருந்தார். நான் தோரயமாக இரவு 09.45 மணிக்கு எனது அப்பாவிற்கு தகவல் சொன்னேன்.

நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்கள் குடியிருப்பில் இரவு நேர காவலர் எப்போதும் இருப்பார் என்றால் சரிதான். நான் காரில் வேகமாக வருவதை அருகாமையில் இருக்கும் குடியிருப்புகாரர்கள் கேட்டதால் அவர்கள் மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது மனைவி பதிவு செய்த வீடியோவையும், கண்காணிப்பு கேமரா பதிவுகளையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் அது என் வழக்கிற்கு பாதகமாக அமைந்துவிடும் என்பதால் அவற்றை நான் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் மனுவை நான் சொல்லி என் அப்பா எழுதினார் அதனை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் படித்து பார்த்து கையொப்பம் செய்திருந்தால் அதை நான் புகார் மனுவில் தெரிவித்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை என்று சொன்னால் சரியல்ல.

1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO. 141/2022

DEPOSITION OF WITNESS P.W. 2

| | | |
|---|---|---|
| NAME | : | JAYAPAL |
| FATHER'S NAME | : | ARUMUGAM |
| VILLAGE | : | CHENNAI |
| OCCUPATION | : | RTD |
| AGE | : | 71 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 6th day of September 2024.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் சென்னையில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மூத்த மகன் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். 11.07.2021ம் தேதி இரவு 10.00 மணிக்கு எனது மருமகள் சுமங்கலி எனக்கு போன் செய்து எனது மகனை பக்கத்து வீட்டை சேர்ந்த நபர்கள் சந்தா தொகை கேட்டு நடந்த பிரச்சனையில் அடித்துவிட்டதாகவும், துரைசாமி என்பவர் செங்கலால் அடித்ததாகவும், தட்சிணாமூர்த்தி மற்றும் அவரது மகனும் உருட்டு கட்டையால் அடித்து ரத்த காயம் ஏற்படுத்தியதாகவும் தகவல் சொன்னார். வீட்டில் வேலை செய்யும் நபரின் மகன் கோபி மூலம் எனது மகன் அரசு மருத்துவமனைக்கு சென்றிருப்பதாக கூறினார். உடனடியாக நானும் எனது இளைய மகன் வளவனும் கார் மூலம் சென்னையிலிருந்து அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு எனது மகன் சிகிச்சையிலிருந்ததை பார்த்தேன். கொரோனா காலம் என்பதால் புறநோயாளியாக சிகிச்சை அளித்து வீட்டிற்கு அனுப்பினார்கள். மறுநாள் காலை புகார் மனுவை எனது மகன் சொல்ல எழுதி அவரிடம் காட்டி படித்து பார்த்து என் மகன் கையொப்பம் செய்தார். இருவரும் காவல் நிலையம் சென்றோம். அங்கு போலீசாரிடம் புகார் அளித்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**1ம் எதிரி தரப்பு கு.வி.**

வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நடந்த நிகழ்ச்சியை எனது மருமகள் வீடியோ பதிவு செய்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது மருமகள் அ.சா.1க்கு எங்கெங்கு காயங்கள் ஏற்பட்ட விவரத்தை போனில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 சொல்ல சொல்ல புகார் மனுவை எழுதினேன் என்ற விவரத்தை புகார் மனுவில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் எனது மகனை மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது அவருடன் கோபி என்பவர் இருந்தார். எனது மகனுக்கு எங்கு காயம் ஏற்பட்டது என்றால் தலையில் ஏற்பட்டது. வலது புறமா, இடது புறமா என்பது தெரியவில்லை.

எனது மகன் மயக்கநிலையில் இருந்ததால் என்னிடம் முழு விவரத்தையும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மறுநாள் காலை 09.00 மணிக்கு நானும் எனது மகனும் ஆட்டோவில் காவல் நிலையம் சென்றோம். நாங்கள் இருவரும் கலந்து பேசி காவல் நிலையத்திற்கு சென்றோம். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் அரசு அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றதால் செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. எனது மகன் அ.சா.1 காரில் வேகமாக செல்வதை பக்கத்து வீட்டிலிருந்தவர்கள் கேட்டதால் அவர்கள் மீது பொய் புகார் கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

நான் சொல்வது போல் மருத்துவமனைக்கு சென்று எனது மகனை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. கொரோனா காலமாக இருந்தாலும் நான் சொல்வது போல் காயம் ஏற்பட்டிருந்தால் உள்நோயாளியாக தான் சிகிச்சை அளித்திருப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எனது மகனின் வீட்டிற்கு பக்கத்தில் மின்கம்பங்கள் உள்ளதா என்பதை நான் பார்க்கவில்லை. அங்கு கண்காணிப்பு கேமராக்கள் உள்ளதா என்றால் இல்லை.

1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.